உ

அம்பாள் துணை



தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## நிர்வாகசபை ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்கு விபரமும்

**1-1-1985 — 31-12-1985**

தெல்லிப்பழை

2-8-86

உ

தேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## தர்மகர்த்தா சபை

திரு. சே. சிதம்பரவுடையார்
,, கு. பாலசிங்கம்
,, க. சிவவாகீசர்
,, சி. விசுவநாதன்
,, அ. சிவபாதசுந்தரம்
,, நா. திருநாவுக்கரசு
,, க. ஜனநாயகம்
டாக்டர் ந புவனேந்திரன்
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P,
(நிர்வாகசபைத் தலைவர்)
திரு க. தணிகாசலம்
(நிர்வாகசபை இணைச் செயலாளர்)
திரு. அ. சண்முகநாதன்
(நிர்வாகசபைத் தனாதிகாரி)

## நிர்வாக சபை

துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா
அப்பாக்குட்டி, J P. (தலைவர்)
திரு. நம. சிவப்பிரகாசம் (உப தலைவர்)
திரு. பொ. செல்லப்பா (உப தலைவர்)
திரு. க சிவவாகீசர் } இணைக் காரியதரிசிகள்
,, க. தணிகாசலம் }
,, அ. சண்முகநாதன் (தனாதிகாரி)
,, ச. ஆறுமுகநாதன்
(உப தனாதிகாரி)
,, சி. விசுவநாதன்
,, நா. திருநாவுக்கரசு
,, வே. சின்னத்துரை
,, இ. முருகையா
,, ந. செல்வநாயகம்
,, இ. இலட்சுமிநாதன்
,, வை. இரத்தினம்
,, மு. அருணையா
,, ச. விநாயகரத்தினம்
திருமதி சி. பொன்னுத்துரை
திரு. நா. ஜெகநாதன்

உ

அம்பாள் துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

# நிர்வாகசபை அறிக்கை — 1985

மேற்படி தேவஸ்தானத் தர்மகர்த்தா சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகசபை ஆண்டு தோறும் தாம் இயற்றும் தேவஸ்தானப் பணிகளையும், வரவு—செலவுக் கணக்குகளையும் பொதுமக்கள் அறியும் நோக்கத்துடன் கிரமமாகப் பிரசுரித்து வருகின்றது. அவ்வகையில் மேற்படி தேவஸ்தானத்தின் பத்தொன்பதாவது நிர்வாகசபை அறிக்கையையும் பட்டயக் கணக்காளர் ஸ்தாபனத்தினால் எண்பார்வை செய்யப்பட்டு அத்தாட்சி செய்யப்பட்ட 1985ஆம் ஆண்டுக்குரிய தேவஸ்தானக் கணக்கு அறிக்கையையும் அம்பாள் அடியார்களுக்குச் சமர்ப்பிப்பதில் எமது நிர்வாகசபை மகிழ்ச்சி யடைகின்றது.

இவ்வாண்டு பன்னிரண்டு சாதாரண நிர்வாகசபைக் கூட்டங்களும், இரண்டு விசேட நிர்வாகசபைக் கூட்டங்களும், மற்றும் பல்வேறு பணிகளுக்குப் பொறுப்பான உபகுழுக் கூட்டங்களும் நடைபெற்று தேவஸ்தான நிர்வாகப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற அம்பாள் திருவருள் பாலித்தது. நிர்வாகப் பணிகள் யாவும் நிர்வாகசபைத் தலைவர் துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தூய்மையான தலைமையில் நிர்வாகசபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள், அந்தணப் பெருமக்கள், மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் சிறப்பான ஒத்துழைப்புடன் செம்மையாக நடைபெற அம்பாள் திருவருள் கைகூடியது.

தேவஸ்தான நித்திய நைமித்தியங்கள் இவ்வாண்டும் முட்டின்றி நடைபெறலாயிற்று. நித்திய பூசைகள் ஐந்து காலமும் மற்றும் விசேட உற்சவங்கள், மகோற்சவங்கள். தனிப்பட்ட அம்பாள் பக்தர்களின் நேர்த்திகள் முதலியன இவ்வாண்டும் தேவஸ்தானத்தில் சிறப்பாக நடந்தேறின. இவற்றில் பெருமளவு பக்தர்கள் பங்குகொண்டு தேவியின் அருள் பெற்று ஏகினர்.

விசேட உற்சவங்கள் :

1. மாதப்பிறப்புகள் தோறும் அதிகாலையில் சங்கிராந்தி தீர்த்தம் சிறப்பாக நடைபெற்றது.

2. மாதந்தோறும் பூரணைத் திருவிழா, தனிப்பட்டவர்கள் உபயமாக ஸ்ரீசக்கரபூசை, அம்பாள் உள்வீதி திருஉலா ஆகிய விசேடங்களுடன் நடைபெற்றது.

3. அபிராமிப்பட்டர் திருவிழா 20-01-1985இல் விசேட உற்சவமாகக் கொண்டாடப்பட்ட சமயம் அபிராமி அந்தாதி பிரசுர வெளியீடு, முற்றும் ஓதுதல், அபிராமிபட்டர் திருவுருவக்காட்சி ஆகிய விசேட நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இது தனிப்பட்டவரின் உபயமாக நடாத்தப்பட்டது.

4. மகாசிவராத்திரி விழா 17-02-1985 அன்று தேவஸ்தானப் பெண்கள் தொண்டர் சபையின் உபயமாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் லிங்கோற்பவர் அபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை, நான்குசாமப் பூசைகள், உள்வீதி, வெளிவீதி அம்பாள்திருவுலா, தீர்த்தம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மறுநாள் காலை அம்பாள் அடியார்களுக்குப் பாரணைப் போசனம் இடம்பெற்றது.

5, பங்குனி உத்தரம் தனிப்பட்டவர் உபயமாக இடம்பெற்றது.

6. பங்குனிக் கடைசிச் செவ்வாய் வருடாந்தப் பொங்கல் 9-04-1985 அன்று காலை 5-30 மணி தொடக்கம் பிற்பகல் 5-00 மணி வரை அடியார்கள் பொங்கலும் பின்பு திருவிழாவும் நடைபெற்றன. இத் திருவிழா தனிப்பட்டவர் உபயமாக இயற்றப்பட்டது.

7. சித்திரை வருஷப் பிறப்பு விழா 13-4-1985 அன்று இரவு 12-15 மணிக்கு 108 கலச அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசைகள், அம்பாள் உள்வீதி, வெளிவீதி திருவுலா ஆகியன சிறப்பாக, தனிப் பட்டவர்களின் உபயமாக நிறைவெய்தியது.

8. மகா கும்பாபிஷேகம் நடந்த தினமாகிய மணவாளக்கோலத் திருவிழா 1-05-1985. பொதுமக்கள் உபயமாக இவ்வாண்டும் சிறப்பாக நடாத்தப்பட்டது. அன்றையதினம் காலை நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும், அன்னதானமும், பிற்பகல் பூந்தண்டிகையில் அம்பாள் திருவீதி உலா உற்சவமும் சிறப்பாக நடைபெற்றன. அன்றைய அன்னதானம் இணுவில் சிவபுண்ணியசீலர் திரு. கல்கி சின்னத்துரை J. P. அவர்களின் உபயமாக நடைபெற்றது.

9. ஆடிச் செவ்வாய்கள் தோறும் தனிப்பட்டவர்கள் உபயங்களாக விசேட பூசைகள், திருவீதியுலா, உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றன. வரலட்சுமி திருவிழா 30-8-1985இல் தனிப்பட்டவர் உபயமாக நடைபெற்றது. அன்றைய தினம் மகா கஜலட்சுமிக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்றன.

10. மகோற்சவங்கள் ஆரம்பமாவதற்கு முன் மூன்று தினங்களுக்குப் பொதுமக்கள் சாந்திக்காக கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், துர்க்கா ஹோமம் முறையே 10-8-85, 11-8-85 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்றன.

11. நவராத்திரிப் பூசை 14-10-1985 அன்று நண்பகல் மகாகும்பம் வைத்தல் பொதுமக்கள் உபயமாகவும், அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவராத்திரி பூசைகள் தனிப்பட்டவர்கள் உபய மாகவும் நடைபெற்றன. இந்நாட்களில் அம்பாள் கொலு இருக்கும் திருக்காட்சி சிறப்பானதாக அமைந்தது. நவராத்திரி பூசை நாட்களில் ஸ்ரீ சக்கரபூசையும் மற்றும் விசேடபூசைகள், தேவி தோத்திரம் ஆகியனவும் நடைபெற்றன, இவ்வாண்டு மாவை முருகப் பெருமான் 22-10-1985 அன்று பிற்பகல் 4-00 மணிக்கு இத் தேவஸ்தானத்தில் எழுந்தருளி மானம்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மறுநாட்காலை விஜயதசமி நாள் நிகழ்ச்சிகளாக ஏடு தொடக்குதல், கௌரிவிரத ஆரம்பம், அம்பாள் வன்னி வாழை வெட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விரு நாள் விழாக்களும் தனிப்பட்டவர் உபயமாகச் சிறப்பாக நடை பெற்றன.

12. கேதாரகௌரி நோன்பு தேவஸ்தானத்தில் 23-10-1985இல் ஆரம்பமாகி 12-11-1985இல் நிறைவேறியது. இந்நோன்பு 950 பெண் பக்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நோன்பு சம்பந்த மான ஒழுங்குகளை மேற்கொள்ள பெண்கள் தொண்டர் சபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றினர்.

13. கந்தசஷ்டி விரதம் அன்று சுற்றுப் பிரகார பாலசுப்பிரமணிய சுவாமிகள் அபிஷேகம், விசேடபூசைகள் கிரமமாக நடை பெற்றன. விரத முடிவு தினமான 17-11-85 அன்று விசேட சங்காபிஷேகமும் ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றன.

14. கார்த்திகைக் குமாராலயதீபம், சர்வாலயதீபம் ஆகிய தினம் 26-11-85 அன்று பிற்பகல் தேவஸ்தானத்தில் தனிப்பட்டவர் உபயமாக நடைபெற்றது.

15. திருவிளக்குப் பூசை இவ்வாண்டு கார்த்திகைப் பூரணை நாளான 27-11-85 அன்று தேவஸ்தானத்தில் பெருமளவு பெண்பக்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

16. திருவெம்பாவைப் பூசை 18-12-85இல் ஆரம்பமாகி வழமை போல் தனிப்பட்டவர்கள் உபயமாகச் சிறப்பாக நடைபெற்றது.

அந்நாட்களில் அதிகாலையில் மகளிர் இல்லச் சிறுமிகள் திருவெம் பாவைப் பாடல்கள் ஓதி வெளிவீதி வலம் வந்தனர். திருவாத வூரடிகள் புராணபடனம் இந்நாட்களில் இடம்பெற்றது. பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் புராண பயன் கூறிச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மகோற்சவங்கள் :

அன்னையின் பெருந்திருவிழாவான மகோற்சவங்கள் இவ்வருடம் பதினெட்டாவது ஆண்டாகச் சிறப்பாகப் பன்னிரண்டு நாட்கள் நடை பெற்றன. தேவஸ்தான கொடியேற்றத் திருவிழா 17-8-1985 அன்று வழமைபோல் பொதுமக்கள் உபயமாக நடைபெற்றது. தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்க ளால் மகோற்சவ கிரியைகள் பக்தர்கள் பரவசம் பெறும் வண்ணம் சிறப்பாக இயற்றப்பட்டன. இவ்வாண்டு கொடியேற்றத் திருவிழாவில் பொதுமக்கள் சார்பாக நிர்வாகசபை உறுப்பினர் திருமதி சிவா. பொன்னுத்துரை அவர்கள் சங்கற்பம் ஏற்பதற்கு நியமிக்கப்பட்டனர். மகோற்சவ உபயங்கள் கிரமப்படி செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய தனிப்பட்ட உபயகாரர்கள் அனைவருக் கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மகோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்க பொருள், நிதி வழங்கியும் மற்றும் வேறு உதவிகள் வழங்கியும் மற்றும் வேறு சேவைகள் புரிந்த அன்பர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றி. இவ் வன்னதானத்தை வழங்க உரிய ஒழுங்குகளை மேற்கொண்ட அன்ன தானச் சபை துர்க்காதுரந்தரி,செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் சிறந்த முறையில் தொண்டாற்றியது. தேவஸ்தான பெண்கள் தொண்டர்சபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், சமயோசித தொண்டர்கள் ஆகியோர் மகோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்க ஆற்றிய தூயதொண்டிற்கு எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

மகோற்சவ தினங்களைப் பிரகடனப்படுத்தப்பட்ட திருவிழாவாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இத்தினங்களில் பல வசதிகளையும் ஏற்படுத்தி உதவிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. மு. பஞ்சலிங்கம் அவர்கட்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். மகோற்சவ வெளி ஒழுங்குகளை வழமைபோல் சிறப்பாக மேற்கொள்ள உதவி, மேற்பார்வை செய்த வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த. இராசரத்தினம் அவர்கட்கும் அவரின் ஏனைய உத்தியோகத்தர்கட்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக் கின்றோம். மகோற்சவநாட்களில் சுகாதார சேவையைச் செம்மையாக

அமைய பல முறைகளிலும் சேவையாற்றிய காங்கேசன்துறை மாவட்ட சுகாதார அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் அவர்கட்கும் அவரின் பகுதி உத்தியோகத்தர்கட்கும் எமது மனப்பூர்வமான நன்றி. மற்றும் இத்தினங்களில் உதவிய எமது பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர்களுக்கும், சாரண உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் நற்பணிகளுக்கு எமது நன்றி. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் தெல்லிப்பழை உபஅலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கும் இத்தினத்தில் பலவிதத்தில் உதவியதற்கு எமது மனபூர்வமான நன்றி.

**சமய நிகழ்ச்சிகள் :**

1. நால்வர் குருபூசை தேவஸ்தான திருமுறைமடத்தில் வழமைபோல் இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது.
2. திருமுறைகள் முற்றும் ஓதுதல் திருமுறை மடத்தில் 04-06-85 தொடக்கம் நடைபெற்றது. அதில் பல சைவப்பெரியார்கள் பங்கு கொண்டு திருமுறை ஓதினர். திருமுறை ஓதல் பூர்த்தி 12-08-1985இல் விசேட விழாவாக நடைபெற்றது. அன்று திருவாளர்கள் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. V. T. சுப்பிரமணியம், திருமதி சிவபாக்கியம் பாலநாதன் ஆகியோர் சமயப் பணி, பண்ணிசைப் பணிகளுக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர்.
3. கந்தப்புராண படிப்பு தேவஸ்தானத்தில் 9-12-1985இல் ஆரம்பமாகி நடைபெற்றது.
4. திருமுறை வகுப்புகள் இவ்வாண்டும் துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் சிறுர்களுக்கு வழமைபோல நடாத்தப்பட்டன.
5. குருகுல வகுப்புகள் பிராமண மாணவர்களுக்கு தேவஸ்தானத்தில் நடாத்தப்பட்டன.

**விசேட வைபவங்கள் :**

1. எமது தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவி துர்க்காதுரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அறுபது வயது பூர்த்தியை முன்னிட்டு மணிவிழாச் சபையினுல் 7-1-1985இல் மணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நாட்டுப் பிரமுகர்கள் பலர் அங்கம் வகிக்கும் மணிவிழாச்சபை இம்மணிவிழா மூன்று தினங்களுக்குப் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்து நடாத்தத் திட்டமிட்டது. எமது நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மிக எளிய முறையில் அது கொண்டாட்டங்களை நடாத்தியது. மணிவிழாச் சபையினுல் மூன்று நூல்கள் வெளியிடப் பட்டன. இச்சபை அன்பர்களிடம் சேகரித்த நிதியைக் கொண்டு

இந்நூல் வெளியீட்டையும் நடாத்தியது. அம்மையார் அவர்களின் தமிழ், சைவத் தொண்டுகளின் சிறப்புக் காரணமாக அன்பர்கள் இங்ஙனம் பெருநிதி உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது. விழாச் செலவு தவிர்ந்த மிகுதிப்பணம் அம்மையார் விருப்பப்படி 30000/- ரூபாவையும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கும் ரூபா 5100/- யாழ்/ பல்கலைக்கழக பண்ணிசைப் பிரிவுக்கும், ரூபா 5000/- யாழ்/பல்கலைக் கழக சிந்தனை வெளியீட்டுக்கும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

2. பெண்கள் தொண்டர் சபை ஆண்டு விழா 29-6-85இல் தேவஸ் தான கலியாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவ் வமயம் பண்ணுகம் பண்டிதை திருமதி பொன்.பாக்கியம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திச் சிறப்பித்தார்.

3. துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டுவிழா 4-8-1985இல் நடைபெற்ற சமயம் தெல்லிப்பழை ப. நோ. கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா அவர்கள் பிரதம விருந் தினராகப் பங்கு கொண்டு சிறுர்களுக்குப் பரிசில் வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

திருப்பணி வேலைகள் :

1. தேவஸ்தான வெளிவீதிச் சுற்றுமதில் பொது நிதியில் நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

2. தேவஸ்தான கிழக்கு வாசல் முன்பாக இரும்புக் கதவு பொருத்தப் பட்டுள்ளது.

3. வெளி வீதியில் மின்சாரக்கம்பங்கள் திருத்தவேலைகள் நிறைவேற்றப் பட்டன.

சமூகப் பணிகள் :

1. தேவஸ்தானத்தின் பொதுநிதியில் மாதந்தோறும் பத்தாயிரம் ரூபா அளவில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் பராமரிப்புக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டுவருவது குறிப் பிடத்தக்கதாகும். தேவஸ்தானத்தின் முக்கிய சமூகப் பணியாக இது கருதப்பட்டு இவ் இல்லம் செவ்வனே நடாத்தப்பெற்று வரு கின்றது. இவ் இல்லத்திற்குரிய புதிய மேல்மாடிக் கட்டிட நிர் மாணத்திற்கும் வேண்டிய நிதியில் பெரும்பகுதி தேவஸ்தானத்தின் பொதுநிதியிலிருந்து செலுத்தப்பட்டு வருகின்றது.

2. எமது நாட்டின் சீரற்றநிலையினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது. மயிலிட்டி கடற் தொழிலாளர் களுக்கு நிவாரணமாக ரூபா 2000/- அன்பளிப்புச் செய்யப்பட்

டது. அதுபோன்று மன்னுர் தொழிலாளர்களுக்கு ரூபா 1,000/- நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு அடிக்கடிவந்து பாது காப்பை நாடும் அகதிகளுக்கு உணவு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குளமங்கால் அர்ச் சாவேரியா கோவிலில் வரும் அகதிகளுக்கு அடிக்கடி உணவு வசதிகள் செய்யப்பட்டுவருகின்றன.

3. மட்டக்களப்பில் நிகழ்ந்த கலவரங்களால் பாதிப்படைந்த அகதி கள் புனர்வாழ்வுக்கு உதவும் முகமாக ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தின் பெயரில் ஒரு குடும்பத்திற்கு குடிசை அமைத்துக் கொடுக்க ரூபா 12,000/- வழங்கப்பட்டுள்ளது.

4. யாழ்ப்பாணத்திலே உள்ள, திருகோணமலைக் கலவரங்களால் பாதிக் கப்பட்ட அகதிகள் நிவாரணமாக அதற்கென ஏற்படுத்தப்பட்ட முகாம் பராமரிப்புக்கு ரூபா 1000/- தேவஸ்தானம் சார்பில் வழக்கப்பட்டது.

3. ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை சிவன்கோவிலில் அன்ன தானம் வழங்கும் சபைக்கு ரூபா 500/- வழங்கப்பட்டுள்ளது.

6. மறைந்த கோவில் தவில் வித்துவான் திரு. த. சாரங்கபாணி அவர் களின் குடும்பத்தினர்க்கும், ஊழியர் அமரர் திரு. ச. நடராசா குடும்பத்திற்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**அந்தணப் பெருமக்கள்:**

தேவஸ்தானத்தின் நித்திய நைமித்தியங்கள் வேதாகம முறைப்படி நடைபெறவும் அம்பாள் பக்தர்கள் தமது வழிபாடுகளையும் நேர்த்திகளையும் உரிய முறைப்படி நடாத்தவும் வேண்டிய பூசைப் பணியைப் பிராமண உத்தமர்கள் இவ்வாண்டும் செவ்வனே நிகழ்த்தி வருகின்றார்கள். தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், உதவிச் சிவாச்சாரியர்களான சிவஸ்ரீ சா. புவனேஸ்வரக்குருக்கள், பிரம்மஸ்ரீ ப. நீலகண்டசர்மா, பிரம்மஸ்ரீ கு. சரவணபவசர்மா, பிரம்மஸ்ரீ வா. அகிலசர்மா, பிரம்மஸ்ரீ ச. ஆனந்தகுமாரசர்மா, பிரம்மஸ்ரீ ச. சிவகுமார சர்மா பிரம்மஸ்ரீ மு. கிருஷ்ணசாமி ஐயா, ஸ்ரீ வி. தட்சணாமூர்த்தி ஐயர் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

**தேவஸ்தான உத்தியோகத்தர்கள்;**

இத் தேவஸ்தான நிர்வாகப்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கி சிறப் பாகச் சேவையாற்றும் உத்தியோகத்தர்களான திரு. கா. சிவபாலன், செல்வி க. சொக்கநாதன், திரு. வி. பொன்னம்பலம், திரு. சி. சிவசுப்பிர மணியம், மற்றும் ஊழியர் திரு. சி. ஆறுமுகம் ஆகியோர்களுக்கு

எமது மனப்பூர்வமான நன்றி. விசேடமாக திரு. கா. சிவபாலன் அவர்கள் தேவஸ்தானத்தில் தங்கியிருந்து முழுநேரப்பணியாகத் தேவஸ்தானத் தொண்டினை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தேவஸ்தானத்தில் கொள்ளை அசம்பாவிதம்:

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு மிகவும் வருத்தத்துக்குரிய அசம்பாவிதம் 4-3-1985 திங்கள் நள்ளிரவு நிகழ்வுற்ற கொள்ளைச் சம்பவமாகும். அம்பாளின் சோதனையாக இச்சம்பவம் நடாத்தப்பட்டது. இவர்கள் நடு இரவில் தேவஸ்தான வளவில் அத்துமீறிப் புகுந்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களைத் துன்புறுத்தியும்,பயமுறுத்தியும் அம்பாளை அலங்காரம் செய்யும் பவுண் நகைகளையும், மேலும் பவுண் பொருட்களையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். பிராமணர்கள், ஊழியர்கள் ஆகியோரின் தனிப்பட்ட பொருட்களையும் பெருமளவு திருடிச் சென்றனர். இவர்களின் இச்செயலுக்கு நாம் வருந்தி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தைத் தேவஸ்தானத்தில் பெருமளவு பக்தர்கள் பங்குகொள்ள நடாத்தி இருந்தோம். உள்ளூர், வெளியூர் புதினப் பத்திரிகைகளும் இச் சம்பவத்தைக் கண்டித்து தத்தம் ஆசிரிய தலையங்கங்கள் மூலமாக வருத்தத்தைத் தெரிவித்தன. இதேபோன்று பல்வேறு ஸ்தாபனங்களும், கோவில்களும் இச்சம்பவத்தைக் கண்டித்து வருத்தத்தை தெரிவித்தன, அவர்கள் எல்லோருக்கும் அந்தத் துன்பம் மிகுந்த நேரத்தில் எமக்கு ஆறுதல் ஆதரவு தெரிவித்தமைக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

குறிப்பு:

1985ஆம் ஆண்டின் அறிக்கையை நாம் ஆயத்தம் செய்யும் சமயம் எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் கிருபையால் தேவஸ்தானத்தின் கொள்ளையின்போது எடுத்துச் சென்ற அம்பாளை அலங்கரிக்கும் பவுண் ஆபரணங்களும், மற்றும் பவுண் பொருட்கள், ஏனைய பொருட்கள் யாவும் பதின்நான்கு மாத காலத்தின் பின்பு 23-5-1986 வெள்ளி வைகாசிப் பூரணை கூடிய புண்ணிய தினத்தில் அதிகாலை அம்பாளின் தெற்கு வாயில் வெளிமண்டபத்தே வைக்கப்பட்டிருந்தது. இது அம்பாளின் அற்புதம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

நினைவு அஞ்சலி:

தேவஸ்தானத் தர்மகர்த்தா சபைத் தலைவராக நீண்ட காலம் தேவஸ்தான வளர்ச்சிக்குச் சிறப்பான சேவையாற்றிய பெரியார் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் 3-9-85இல் மறைந்தனர் என்ற செய்தி

அறிந்து எல்லோரும் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தோம். இவர் மானிப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெரிதும் பெற்றவராவர்.

தமது சமூகப் பணியை அமைதியாக ஆற்றியதுடன் தேவஸ்தானப் பணிகளிலும் தமது வழிகாட்டலைச் சிறப்பாகச் செய்துள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி :

1. தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர் தேவஸ்தானப்பணிகளில் மிகவும் கரிசனை கொண்டு ஊக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றனர். அவர்களின் ஒத்துழைப்புக்கு எமது நன்றி.

2. தேவஸ்தான பெண் தொண்டர் சபையினருக்கு அவர்களின் சிறப்பான தொண்டிற்கு எமது நன்றி.

3. மகோற்சவ காலங்களிலும் மற்றும் உற்சவகாலங்களிலும் எமது அழைப்பை ஏற்றுத் தேவஸ்தானத்திற்கு வருகைதந்து தமது மங்கள இசை வாத்தியத் தொண்டினை இயற்றிய நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் வித்துவான்கள், இசைவிற்பன்னர்கள், பண்ணிசைச் செல்வர்கள் ஆகியோருக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

4. தேவஸ்தானத்தின் பாதுகாப்புச் சேவைகளைக் கிரமமாக நடாத்தி வந்த யாழ்ப்பாண பாதுகாப்புச் சேவை ஸ்தாபனத்திற்கும், அதன் உள்ளூர் பொறுப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் அவர்களின் சிறப்பான பணிகளுக்கு எமது நன்றி.

5. வட்பிராந்திய போக்குவரத்து பேருந்துச் சபையினர், தனியார் போக்குவரத்துச் சேவையினருக்கும், அவர்கள் தேவஸ்தான விசேட தினங்களில் அம்பாள் பக்தர்கள் தமது பிரயாணத்தை வசதியாக மேற்கொள்ளப் பெருமளவு உதவி வருவதற்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

6. உள்ளூர், வெளியூர் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் நிருபர்களுக்கும், அவர்கள் தேவஸ்தான நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் பிரசுரித்து எமக்கு உதவுகின்றமைக்கு எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

**தர்மகர்த்தாசபை :**

எமது தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் எமக்கு அளிக்கும் ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் அச்சபையினருக்கு எமது மனப்பூர்வமான நன்றி.

**அம்பாள் பக்தர்கள் :**

எமது தேவஸ்தான வளர்ச்சிக்குப் பெருமளவில் பொருளையும், நிதியையும் வாரிவழங்கியும் பல துறைகளிலும் உதவிகள் வழங்கிவரும் அடியார்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மேலும் உபயகாரர்கள் மற்றும் அன்பர்கள் அனைவருக்கும் எமது நிர்வாகசபை சார்பில் நன்றி தெரிவிப்பதுடன் அம்பாள் அருள் கிடைக்க எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளை மேலும் மேலும் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்
2-8-86

சு. சிவவாகீசர்,
க. தணிகாசலம்,
இணைக்காரியதரிசிகள்

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

## 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு அறிக்கை

அன்புடையீர்,

*நாங்கள், மேற்குறிப்பிட்ட வருடத்திற்கான கணக்குப் பரிசோதனை மேற்கொண்டு பின்வருவனவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.*

**நிலையான சொத்துக்கள் ரூ. 3448,988-10**

*நிலையான சொத்துக்கான புத்தகம் பரீட்சிக்கப்பட்டது. எனினும் இச்சொத்துக்களின் பெறுமதி எம்மால் நிர்ணயிக்கப்படவில்லை. நடைமுறை வருடத்தில், ரூ. 15000 வள்ளி தெய்வானை விக்கிரகங்களும், ரூ. 2990திற்கு வெள்ளி சூலாயுதமும், ரூ. 89,081-25 செலவில் சுற்றுமதிலும் ரூ. 2000திற்கு சோடோபசார செற்றும், மற்றும் சிறு கருவிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நடைமுறை வருடத்தில் முதல் இரு மாதங்களில் ரூ. 44,000 பெறுமதியான தங்க நகைகள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன. அத்துடன் ரூ. 95,795 பெறுமதியான நகைகள் விற்கப்பட்டு மகளிர் இல்ல கட்டிட நிதிக்காக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 04-03-85இல் தேவஸ்தானத்தில் நடைபெற்ற கொள்ளையில் ரூ. 184,000 பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக நிர்வாக சபையால் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி எம்மால் நிர்ணயிக்கப்படவில்லை.*

**நிலையான வைப்புகள்:**

*தே. சே. வங்கியில் நிலையான வைப்பாக ரூ. 200,000 சென்ற வருட வைப்பாக இருந்தது. தேவஸ்தானத்தின் பெயரில் நிலையான வைப்புக்கள் வைத்திருக்க முடியாது என்ற வங்கியின் அறிவுறுத்தலின் படி, மேற்படி வைப்பும், அதற்கான நடைமுறை வருட வட்டி ரூ. 17,822-50உம் மீளப் பெறப்பட்டுள்ளது. தேவஸ்தானத்தின் பெயரில், தற்போது நிலையான வைப்புகள் எதுவும் இல்லையென நிர்வாக சபையால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.*

**வங்கி நடைமுறைக் கணக்குகளும், சேமிப்புகளும்:**

ஆடி மாதத்தில், வர்த்தக வங்கியில், நடைமுறைக்கணக்கு ஒன்று தேவஸ்தானத்தின் பெயரில் தொடக்கப்பட்டுள்ளது. தே. சே. வங்கி, இல. வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் மீதிகள் வங்கிகளால் நேரடியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

**கையிருப்பு ரொக்கம்:**

தனதிகாரியிடம் உள்ள நிர்வாக இருப்புப் பணம் 01-01-1986 அன்று காலை எமது பிரதிநிதிகளால் எண்ணிச் சரிபார்க்கப்பட்டன. அன்றையதினம் நிர்வாகசபைத் தலைவரிடமோ அல்லது தர்மகத்தா சபைக் காரியதரிசியிடமோ கையிருப்பில் பணம் இருக்கவில்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் கொள்ளையின்போது ரூபா 11,240-07 கொள்ளையடிக்கப்பட்டதாக நிருவாகசபையினரால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**ஒதுக்கு நிதி 273452-17 ரூபா**

தேவஸ்தானத்தின் மாதாந்த பெறுவனவுகளின் 5% தேவஸ்தானத்தின் பெயரில் ஒதுக்குநிதியாகச் சேமிப்பு வங்கியில் வைக்கப்படுகிறது. இவ்வருட மாதாந்த வைப்புகளின் மொத்தம் ரூ. 73600-00உம், இவ் வருட வட்டி ரூ. 17984-40உம், சென்ற வருட ஒதுக்கு நிதியான 314,095-27உடன் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், மகளிர் இல்லக் கட்டிட நிதிக்கு நிதிவழங்குவதற்காக ரூபா 132,177-50 பொதுநிதிக்கு மாற்றப்பட்டிருகிறது.

**வரவுகள் :**

1. உபயங்கள், அபிஷேகங்கள் வரவு (14எ-1331 தொடக்கம் 18எ-1800 வரை, 20எ - 190 தொடக்கம் 2913 வரை). திருமணங்கள் வரவு (11எ-1035 தொடக்கம் 1100 வரை. 19எ-1801 தொடக்கம் 1821 வரை). திருவிளக்குப் பூசை (907 தொடக்கம் 1000 வரை, 1 தொடக்கம் 194 வரை). கேதார கௌரி விரதம் (2189 தொடக்கம் 2500 வரை, 1 தொடக்கம் 916 வரை).

நிர்வாக வரவு — நானுவித வரவு, அம்பாள் பென்ரன் விற்பனை, புத்தகவிற்பனை, வரலட்சுமி விழா, கொடியேற்ற விழா, மடப்பள்ளி குருக்கள் வீட்டு வாடகை, குருக்கள் வீட்டு மின்கட்டண வரவு, காணி குத்தகை வரவு உட்பட ஏனைய வரவுகள் (6431 தொடக்கம் 9638 வரை) பிரதிப் பற்றுச்சீட்டுகள், புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

2. பொருட்கள் உபகரிப்புக்களான பவுண் (574 தொடக்கம் 599 வரை), வெள்ளி (263 தொடக்கம் 286 வரை), பித்தளை (481 தொடக்கம் 719 வரை) என்பவற்றின் பிரதிப் பற்றுச்சீட்டுகள் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

கொள்ளையின்போது, இவ்வருட பவுண் உபகரிப்புகளும் கொள்ளையடிக்கப்பட்டதாக நிர்வாகத்தினரால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மற்றும் நுகர் பொருட்கள் அன்றுடப் பாவனைக்கு எடுக்கப்படுவதால் நுகர் பொருட்களின் பெறுவனவுகளுக்கான (140 தொடக்கம் 160 வரை) பற்றுச்சீட்டுகள், எம்மால் கணக்காய்வு செய்யப்படவில்லை.

3. பிரசாத வரவு (1072 தொடக்கம் 3991வரை) பிரதிப் பற்றுச்சீட்டுகள், புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

4. டிக்கற் விற்பனை வரவு புத்தக அடிக்கட்டைகளுடனும், இருப்புப் புத்தகங்களுடனும் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன. டிக்கட் விற்பனையால் இவ்வருட மொத்தப் பெறுவனவு ரூபா 401,210-00 ஆகும்.

5. அம்பாள் படவிற்பனை மூலம் ரூபா 10,100-00உம், அம்பாள் பென்ரன் விற்பனை மூலம் ரூபா 1500-00 பெறப்பட்டுள்ளது. வருட இறுதியில் அம்பாள் படம் 556 கையிருப்பில் இருந்ததாக எம்மால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளளது. கொள்ளையின்போது கையிருப்பில் இருந்த அம்பாள் பென்ரன் மிகுதி 8ம் கொள்ளையடிக்கப்பட்டதாக நிர்வாக சபையினரால் உறுதிப்படுத்தப்பட்டது.

6. உண்டியல் வரவு ஒவ்வொருநாளும் மாலையில் உபதனுதிகாரியினதும், காசாளரினதும் முன்னிலையில் கணக்கெடுக்கப்பட்டுப் பற்றுச்சீட்டு எழுதப்படுகிறது. இவ்வருடத்திற்கான உண்டியல் வரவு ரூ. 214,128-64 ஆகும்.

**செலவுகள் :**

1. தேவஸ்தான நிர்வாகச் செலவுகளும், மற்றும் அமைப்புச் செலவுகளும் அவற்றுக்குரிய உறுதிச்சீட்டுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

2. மகோற்சவம், உபயங்கள், திருமணங்கள், பிரசாதம் என்பவற்றுக்கு ஒரேவகையான பொருட்களே வாங்கப்படுவதால் அவற்றுக்கான செலவுகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

3. அரியதும் பெரியதும், அபிராமி அந்தாதி, கூட்டுவழிபாட்டுப் பாமாலே ஆகிய புத்தகங்கள் அச்சடிப்பதற்காக இவ்வருடம் ரூ. 16,945–00 செலவழிக்கப்பட்டுள்ளது.

4. மகளிர் இல்ல அன்பளிப்புப் பணமாக ரூ. 106,000–00உம், மகளிர் இல்ல கட்டிட நிதிக்காக ரூ, 702,920–00 உம் தேவஸ்தானத்தால் வழங்கப்பட்டுள்ளது.

5. சுற்றுமதில் அமைப்பிற்காக, இவ்வருடம் ரூ. 89,081-25 செல வழிக்கப்பட்டுள்ளது,

பொது

1. எம்மால் ஒப்பீடு செய்யப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பின் வருமாறு.

(1) பிரசாதங்கள்

(2) உபயங்கள், திருமணங்கள்

(3) அர்ச்சனே, நேர்த்தி, நூல் (அடிக்கட்டைகள்)

(4) நிர்வாகம் (கொடியேற்று விழா, திருவிழாப் பூசை, கேதார கௌரி விரதம் ஏனேயவை)

(5) பொருள் உபகரிப்பு (பொன், பித்தளே, வெள்ளி)

2. எம்மால் ஒப்பீடு செய்யப்பட்ட புத்தகங்கள் பின்வருமாறு;

(1) காசுப் புத்தகம்

(2) பேரேடு

(3) நாளேடு

(4) அர்ச்சனேச் சிட்டு, பற்றுச்சீட்டு வரவுகள் விநியோகப் புத்தகம்

(5) அர்ச்சனே

(6) நாளாந்தக் கணக்கெடுப்புப் புத்தகம்

(7) மாதாந்த வரவு பதிவுப் புத்தகம்

(8) நிர்வாக பற்றுச்சீட்டு பதிவுப் புத்தகம்

(9) அபிஷேக, உபய, திருமணங்கள் செலவுப் பதிவுப் புத்தகம்

(10) பொருட்பதிவுப் புத்தகம்

(11) அபிஷேக, உபய, திருமணங்கள் செலவுப் பதிவுப் புத்தகம்

(12) மடைப்பள்ளி (வரவு) பிரசாதப் பதிவுப் புத்தகம்

(13) மடைப்பள்ளி (செலவு) பிரசாதப் பதிவுப் புத்தகம்

(14) காசோலேப் பதிவுப் புத்தகம்

தங்கள் நன்றியுள்ள

**KRESTON M. N. & Co.**

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## 31-12-1985இல் ஐந்தொகை

| | | |
|---|---|---|
| **பொது விதி** | | |
| கடந்தவருட ஐந்தொகையால் மீதி | 3,908,039-44 | |
| **கூட்டுக :** | | |
| அன்பளிப்பு (குறிப்பு 1) | 283,733-45 | |
| ஒதுக்கு நிதியிலிருந்து மாற்றம் | 132,177-50 | |
| வருமான பகிர்வு கணக்கால் மாற்றம் | 28,343-79 | |
| | 4,352,294-18 | |
| **கழிக்க :** | | |
| நன்கொடைச் செலவுகள் (குறிப்பு 2) | 828,170-00 | 3,524,124-18 |
| **ஒதுக்கு நிதி :** | | |
| கடந்த வருட ஐந்தொகையால் மீதி | 314,095-27 | |
| **கூட்டல் :** | | |
| இவ்வருட ஒதுக்கம் | 91,534-40 | |
| | 405,629-67 | |
| **கழிக்க :** | | |
| பொது நிதிக்கு மாற்றம் | 132,177-50 | 273,452-17 |
| | | 3,797,576-35 |
| நிலையான சொத்துக்கள் (குறிப்பு 3) | | 3,448,985-10 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பு கணக்கு இல. 716 | 273,452-17 | |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு இல. 3155 | 54,741-08 | |
| வர்த்தக வங்கி நடைமுறைக் கணக்கு இல. 12692 | 3,888-45 | |
| கையிருப்பு காசு | 16,509-55 | 348,591-25 |
| | | 3,797,576-35 |

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது
**இறெஸ்ரன் என். எம். எஸ். அன் கோ.**
பட்டயக் கணக்காளர்கள்

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## 31-12-1985இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| **வருமானம் :** | | | |
| ரிக்கற் வரவு — பெறுவனவு, கொடுப்பனவு கணக்கால் | | 401,210-00 | |
| ஏனைய வரவு — பெறுவனவு, கொடுப்பனவு கணக்கால் | | 404,185-59 | 805,395-59 |
| **வட்டி வரவு** | | | |
| தேசிய சேமிப்பு வங்கி — நிலையானவைப்பு | 12,20-08 | 11,139-06 | |
| தேசிய சேமிப்பு வங்கி — நிலையானவைப்பு | 12,20-63 | 6,683-44 | |
| தேசிய சேமிப்பு வங்கி — சேமிப்பு கணக்கு இல. | 716 | 17,934-40 | 35,756-90 |
| | | | 841,152-49 |
| **செலவினம்** | | | |
| கோயில் நிர்வாக பராமரிப்பு செலவு — பெறுவனவு கொடுப்பனவு கணக்கால் | | 324,072-48 | |
| பெறுமானத் தேய்வு (குறிப்பு 6) | | 196,985-20 | |
| கொள்ளையால் ஏற்பட்ட நஷ்டம் (குறிப்பு 6) | | 200,216-62 | 721,274-30 |
| **பகிர்வு** | | | |
| ஒதுக்கு நிதிக்கு மாற்றிய தொகை | | 91,534-40 | |
| பொது நிதிக்கு மாற்றிய தொகை | | 28,343-79 | 119,878-19 |

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## 31-12-1985இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

**01-01-1985இல் நிலுவை**

| | | | |
|---|---|---|---|
| இலங்கை வங்கிக் கணக்கு 3155 | | 123,019-06 | |
| காசு நிர்வாகம் | | 23,545-33 | 146,564-39 |
| நிர்வாக அன்பளிப்புப் பெறுவனவுகள் | | | 231,769-45 |
| **டிக்கற் பெறுவனவுகள்** | | | |
| அர்ச்சனை | | 384,790-00 | |
| நூல் | | 12,392-00 | |
| நேர்த்தி | | 3,723-00 | |
| பொங்கல் டிக்கற் | | 305-00 | 401,210-00 |
| **ஏனைய பெறுவனவுகள்** | | | |
| மகோற்சவம் உபயங்கள் வரவு | 248,105-00 | | |
| திருமணங்கள் வரவு | 94,825-00 | | |
| பிரசாதம் வரவு | 55,016-00 | | |
| | 397,946-00 | | |
| **கழிக்க** | | | |
| உபயங்கள், திருமணங்கள், பிரசாத செலவு | 248,048-80 | 149,897-20 | |
| உண்டியல் | | 214,128-64 | |
| கடை வாடகை | | 600-00 | |
| அம்பாள் பட விற்பனை | 10,100-00 | | |
| கழி: அம்பாள்பட செலவு | 8,400-00 | 1,700-00 | |
| அம்பாள் கலர் பென்ரன் விற்பனை | | 1,200-00 | |
| மடைப்பள்ளி ஐயர் வீட்டு வாடகை | | 500-00 | |
| குருக்கள் வீட்டு மின் கட்டணம் | | 400-00 | |
| கேதார கௌரி விரத வரவு | 29,980-00 | | |
| கழி: கேதார கௌரி விரத செலவு | 15,752-40 | 14,227-60 | |

| | | | |
|---|---|---|---|
| திருவிளக்குப் பூசை வரவு | 4,850-00 | | |
| கழி: திருவிளக்குப் பூசை செலவு | 2,276-55 | 2,573-45 | |
| வரலட்சுமி விரத வரவு | 4,140-00 | | |
| கழி: வரலட்சுமி விரத செலவு | 2,958-50 | 1,181-50 | |
| தபால் அர்ச்சனை வரவு | 394-50 | | |
| கழி: தபால் அர்ச்சனை செலவு | 248-00 | 146-50 | |
| சந்தனக் காப்பு | | 550-00 | |
| நானாவித வரவு | | 17,080-70 | 404,185-59 |
| தங்கநகை விற்பனவு வரவு | | | 95,745-00 |
| தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்பு மீளல் | | | 200,000-00 |
| வட்டி வரவு – தேசிய சேமிப்பு வங்கி | | | 40,000-00 |
| | | | 1,519,474-43 |

## வங்கி இணக்கக்கூற்று

தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கு 716

| | | |
|---|---|---|
| தேசிய உறுதிச் சீட்டின்படி இருப்பு | | 248,462-17 |
| கூட்டுக: | | |
| மாற்றப்படாத வைப்புக்கள் | 19,140-00 | |
| | 5,850-00 | 24,990-00 |
| ஐந்தொகையின்படி வங்கி மீதி (புத்தகத்தின்படி) | | 273,452-17 |

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## 31-12-1985இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு

**கொடுப்பனவுகள்:**

**நிர்வாகப் பராமரிப்புச் செலவு:**

| | | |
|---|---|---|
| *நித்திய பூசைத் திரவியங்கள்* | | *16,376-75* |
| *அச்சுக் கந்தோர் செலவு* | | *17,689-10* |
| *குருமார் ஊழியர் சம்பளச் செலவு* | *69,805-00* | |
| *குருமார் ஊழியர் விசேட சேவை* | *32,140-00* | *101,945-00* |
| *மின்சார செலவு* | | *7,454-50* |
| *பாதுகாப்புச் சேவை* | | *17,630-00* |
| *மணவாளக் கோல திருவிழா செலவு* | | *10,501-75* |
| *பிரயாணச் செலவு* | | *3,048-00* |
| *கணக்காய்வாளர் கட்டணம்* | | *2,175-00* |
| *கட்டிடப் பராமரிப்புச் செலவு* | | *37,926-10* |
| *மராமத்துச் செலவு* | | *27,709-90* |
| *மின் இணைப்புகள் திருத்தச் செலவு* | *3,512-60* | |
| *மின் இயந்திரப் பராமரிப்பு செலவு* | *7,848-20* | *11,360-80* |
| *புத்தக அச்சுக் கூலி (குறிப்பு 7)* | *16,945-00* | |
| *கழி: புத்தக விற்பனை* | *8,517-00* | *8,428-00* |
| *புதினப் பத்திரிகை* | | *1,527-50* |
| *வங்கிச் செலவு* | | *96-40* |
| *புத்தக வெளியீட்டுச் செலவு* | | *651-00* |
| *மணிவிழாச் செலவு* | | *695-00* |
| *வருடப்பிறப்புக் கைவிசேஷம்* | | *950-00* |
| *கோசாலை பராமரிப்பு* | | *8,063-00* |
| *ஆதனவரி* | | *26-52* |
| *கொடியேற்ற விழாச் செலவு* | *49,661-00* | |
| *கழி: கொடியேற்ற விழா வரவு* | *34,939-00* | *14,722-00* |

4

| | | |
|---|---|---|
| நவராத்திரி பூசைச் செலவு | 5,166-00 | |
| துர்க்கா ஹோமச் செலவு | 8,808-50 | |
| திருவெம்பாவைச் செலவு | 4,958-05 | |
| புராணப் படிப்புச் செலவு | 2,954-50 | |
| திருமுறைப் படிப்புச் செலவு | 4,004-05 | |
| நானாவிதச் செலவுகள் | 9,205-96 | 324,072-48 |
| கொள்ளையடிக்கப்பட்ட பணம் | 11,240-07 | |
| கொள்ளையால், குருமார், ஊழியருக்கு வழங்கிய நட்டஈடு | 4,976-55 | 16,215-62 |
| நன்கொடைச் செலவுகள் (குறிப்பு 2) | | 828,170-00 |
| **மூலதனச் செலவுகள்:** | | |
| வாகனங்கள் | 2,000-00 | |
| விக்கிரகம் | 15,000-00 | |
| வெள்ளி சூலாயுதம் | 2,990-00 | |
| கேத்தல் | 60-00 | |
| சிறுகருவிகள் | 2,945-00 | |
| பித்தளைப் பாத்திரம் ஆசமனப் பாத்திரம் | 200-00 | |
| மதில் அமைப்பு | 89,081-25 | |
| தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கு | 163,600-00 | 275,876-25 |
| **31-12-1985இல் நிலுவை:** | | |
| இலங்கை வங்கி கணக்கு 3155 | 54,741-08 | |
| வர்த்தக வங்கி கணக்கு 12692 | 3,888-45 | |
| கையிருப்பு — காசு | 16,509-55 | 75,139-08 |
| | | 1,519,474-43 |

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

| குறிப்பு 1 | அன்பளிப்பு வரவு |
|---|---|
| நிர்வாக வரவு | 231,769-45 |
| பொன் தங்க நகைகள் | 44,000-00 |
| வெள்ளி | 1,150-00 |
| பித்தளை | 5,147-00 |
| வாகனங்கள் | 1,367-00 |
| குடை | 300-00 |
| | 283,733-45 |

| குறிப்பு 2 | நன்கொடை செலவு |
|---|---|
| மகளிர் இல்லம் | 106,000-00 |
| மகளிர் இல்ல கட்டட நிதி | 702,920-00 |
| கடற்றொழில் சங்கம் | 2,000-00 |
| புனர்வாழ்வுக் கழகம் | 1,000-00 |
| நல்லை ஆதீனம் | 1,000-00 |
| அகதிகள் நிதி | 13,000-00 |
| நானாவித அன்பளிப்பு | 2,250-00 |
| | 828,170-00 |

குறிப்பு—3

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

| நிலையான சொத்துகள் | விதம் | வருடத் தொடக்க மீதி | நடைமுறை வருடத்திற்கான சேர்வு | விற்கப்பட்டவை கொள்ளையடிக்கப்பட்டவை | இவ்வருடத் தேய்மானம் | மீதி |
|---|---|---|---|---|---|---|
| காணிகள் | — | 526,125-00 | — | — | — | 526,125-00 |
| கட்டிடம் (குறிப்பு 4) | 5% | 1672,243-00 | 89,081-25 | — | 83,612-15 | 1677,712-10 |
| தேர் — — | 10% | 96,594-59 | — | — | 9,659-46 | 86,935-13 |
| வாகனங்கள் — — | 10% | 9,194-85 | 3,367-00 | — | 919-49 | 11,642-36 |
| தங்க நகைகள் (குறிப்பு 5) | — | 253,505-00 | 44,000-00 | 279,,745-00 | — | 17,760-00 |
| வெள்ளி — — | — | 18,513-00 | 1,150--00 | — | — | 19,663-00 |
| உற்சவ மூர்த்திகள் — | — | 47,770-00 | 17,990-00 | — | — | 65,760-00 |
| குடைகள் — — | 10% | 5,465-14 | 300-00 | — | 546-51 | 5,218-63 |
| பீத்தளை — — | — | 67,386-00 | 5,347-00 | — | — | 72,733-00 |
| மின் இணைப்புகள் — | 10% | 75,182-93 | — | — | 7,518-29 | 67,664-64 |
| தளபாடம் — — | 10% | 49,918-87 | 60-00 | — | 4,991-89 | 44,986-98 |
| மடைப்பள்ளி உபகரணம் — | 5% | 1,633-34 | — | — | 81-68 | 1,551-96 |
| துவிச்சக்கரவண்டி — | 10% | 1,015-87 | — | — | 101-59 | 914-28 |
| கிணறு இயந்திர இணைப்புகள் | 10% | 30,505-98 | — | — | 3,050-60 | 27,455-38 |
| சிறுகருவிகள் — — | 5% | 3,676-32 | 2,945-00 | — | 183-82 | 6,437-50 |
| பாதுகாப்புப் பெட்டி — | 5% | 12,860-62 | — | — | 643-03 | 12,217-59 |
| அசையாமணி — | 5% | 36,443-59 | — | — | 1,822-18 | 34,621-41 |
| தீர்த்தக்கேணி — | 10% | 573,495-63 | — | — | 57,349-56 | 516,146-07 |
| மின் உற்பத்தி இயந்திரம் | 10% | 128,250-00 | — | — | 12,825-00 | 115,425-00 |
| அன்னதான விடுதி உபகரணம் | 5% | 5,700-00 | — | — | 285-00 | 5,415-00 |
| ஏணி — — | 5% | 3,705-00 | — | — | 185-25 | 3,519-75 |
| சப்பறம் — — | 10% | 121,904-02 | — | — | 12,190-40 | 109,713-62 |
| சப்பறக் கொட்டகை — | 5% | 20,386-00 | — | — | 1,019-30 | 19,366-70 |
| | | 3761,475-05 | 164,240-25 | 279,745-00 | 196,985-20 | 3448,985-10 |

குறிப்பு 4 கட்டிடம்

| | விதம் | வருடத்தொடக்க மீதி | நடைமுறைவருடத் திற்கான சேர்வு | இவ்வருடத் தேய்மானம் | மீதி |
|---|---|---|---|---|---|
| தேர்முட்டி | 5% | 146,747-42 | ——— | 7,337-37 | 139,410-05 |
| கடை | 5% | 10,716-70 | ——— | 535-84 | 10,180-86 |
| இராஜ கோபுரம் | 5% | 684,163-22 | ——— | 34,208-16 | 649,955-06 |
| குருக்கள் வீடு | 5% | 74,429-75 | ——— | 3,721-49 | 70,708-26 |
| வசந்தமண்டபம் | 5% | 41,469-76 | ——— | 2,073-49 | 39,396-27 |
| மலசலகூடம் | 5% | 6,119-34 | ——— | 305-97 | 5,813-37 |
| கல்யாணமண்டபம் | 5% | 446,887-37 | ——— | 22,344-37 | 424,543-00 |
| எழுந்தருளி கோயில் | 5% | 10,937-17 | ——— | 546-86 | 10,390-31 |
| நிதி அலுவலகக் கட்டிடம் | 5% | 10,422-51 | ——— | 521-12 | 9,901-39 |
| சுந்தோர் கட்டிடம் | 5% | 1,951-89 | ——— | 97-59 | 1,854-30 |
| பொங்கல் கொட்டில் | 5% | 18,646-44 | ——— | 932-32 | 17,714-12 |
| அன்னதான விடுதி | 5% | 161,596-00 | ——— | 8,079-80 | 153,516-20 |
| திருமறை மடம் | 5% | 8,485-08 | ——— | 424-25 | 8,060-83 |
| மடைப்பள்ளி | 5% | 12,395-36 | ——— | 619-77 | 11,775-59 |
| சுற்றுமதில் | 5% | 3,225-25 | 89,081-28 | 161-26 | 92,145-24 |
| மின் இயந்திரக் கட்டிடம் | 5% | 34,049-74 | ——— | 1,702-49 | 32,347-25 |
| | | 1,672,243-00 | 89,081-25 | 82,612-15 | 167,712-10 |

குறிப்பு 5 தங்கநகைகள் விற்கப்பட்டவை கொள்ளையடிக்கப்பட்டவை

| | |
|---|---|
| விற்கப்பட்டவை | 95,748-00 |
| கொள்ளையடிக்கப்பட்டவை | 184,000-00 |
| | 279,745-00 |

குறிப்பு 6. கொள்ளையால் ஏற்பட்ட நஷ்டம்

| | |
|---|---|
| கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகள் | 184,000-00 |
| கொள்ளையடிக்கப்பட்ட பணம் | 11,240-07 |
| கொள்ளையால் குருமார், ஊழியர்களுக்கு வழங்கிய நஷ்ட ஈடு | 4,976-85 |
| | 200,216-62 |

குறிப்பு 7 புத்தக அச்சுக்கூலி

| | |
|---|---|
| அரியதும், பெரியதும் | 10,000-00 |
| அபிராமி அந்தாதி | 3,795-00 |
| கூட்டுவழிபாட்டு பாமாலை | 3,180-00 |
| | 16,945-00 |

முக்கிய குறிப்பு :- கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மீண்ட சம்பவம்

23-5-86 வெள்ளிக்கிழமை அதிகாலை 4-30 மணியளவில் மீண்டும் நகைகள் அனைத்தும் கிடைக்கப்பெற்ற சம்பவத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்து இதனை ஒப்படைக்க வேண்டுமென்று நினைத்துச் செயலாற்றிய அன்பர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
நிர்வாகசபை

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

## 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு அறிக்கை

### அன்னதானசபை

நாங்கள் மேற்குறிப்பிட்ட வருடத்திற்கான கணக்குப் பரிசோதனையை மேற்கொண்டு பின்வருவனவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

**வரவு :** அன்னதான சபைக்கான வரவுகள் (1 தொடக்கம் 248 வரை) உள்ள பிரதிப் பற்றுச் சீட்டுக்கள், புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டது. இவ்வரவில், அன்னதான உபகரிப்பும், திருமண பாத்திரங்களின் பேரில் வரவும் அடங்குகின்றன.

**செலவு :** அன்னதானசபையில் ஏற்பட்ட செலவுகளுக்கான உறுதிச் சீட்டுக்கள் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

(இச் செலவில் அன்னதானத்திற்குத் தேவையான பொருட்களும், பாத்திரங்களும், சமையல்கூலி, போக்குவரத்துச் செலவு, விசேஷ சேவை, திருத்தச் செலவுகள் என்பனவும் அடங்குகின்றன.)

தங்கள் நன்றியுள்ள

**KRESTON M. N. S. & Co.**

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## அன்னதான சபை

## 31-12-1985இல் முடிவடைந்த வருடத்திற்கான கொடுப்பனவு பெறுவனவுக் கணக்கு

| | | |
|---|---|---|
| *01-01-1985இல் கையிருப்பு* | | |
| *அன்னதான உபகரிப்பு* | | *80,322-00* |
| *திருமண பாத்திரங்களின் பேரில் வரவு* | | *6,600-00* |
| | | *86,922-00* |
| *அரிசி* | | *16,502-00* |
| *மரக்கறி, தேங்காய், உபஉணவுப் பொருட்கள்* | | *38,107-28* |
| *இடியப்பம்* | | *420-00* |
| *மிளகாய் திரித்த கூலி* | | *30-00* |
| *விறகு* | | *2,380-00* |
| *தேயிலை, சீனி ஏனையவை* | | *144-00* |
| *சமையல் கூலி* | | *7,900-00* |
| *கிடாரம் திருத்தச் செலவு* | | *2,150-00* |
| *போக்குவரத்துச் செலவு* | | *345-00* |
| *கணக்காய்வாளர் கட்டணம்* | | *160-00* |
| *அந்தணர், தட்சணை, தானம்* | | *110-00* |
| *நானாவித செலவுகள்* | | *247-50* |
| *குளிர்சாதனப்பெட்டி முற்பணம்* | *10,000-00* | |
| *மின்விசிறி* | *1,686-95* | |
| *வாளி, சட்டிகள்* | *4598-00* | |
| *பானை* | *210-00* | |
| *கத்தி* | *40-00* | |
| *அகப்பை* | *50-00* | |
| *கேத்தல்* | *290-00* | |
| *ரம்ளர்கள்* | *250-00* | *17,124-95* |
| *31-12-1985இல் கையிருப்பு* | | *1,331-27* |
| | | *86,922-00* |

# தேவஸ்தான அர்ச்சகர் விபரம்

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
(பிரதான சிவாசாரியார்)

சிவஸ்ரீ ப. நீலகண்ட சர்மா
(கோயில் நிரந்தர அர்ச்சகர்)

சிவஸ்ரீ சா. புவனேஸ்வரக் குருக்கள்
(உதவிக் குருக்கள்)

ஸ்ரீ எஸ். சரவணபவ சர்மா

பிரம்மஸ்ரீ வா. அகில சர்மா

,, கு. சரவணபவன் ஐயர்

,, ச. சிவகுமார சர்மா

,, ச. ஆனந்தகுமார சர்மா

,, மு. கிருஷ்ணசாமி சர்மா

ஸ்ரீ வி. தட்சணாமூர்த்தி ஐயர்

பிரம்மஸ்ரீ வி. நாராயண சர்மா
(குருகுல வாத்தியார்)

## ஊழியர்கள்

திரு. கா. சிவபாலன்
திரு. வி. பொன்னம்பலம்
திரு. சி. சிவசுப்பிரமணியம்
செல்வி க. சொக்கநாதர்
திரு. சி. ஆறுமுகம்

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — 7905/8-86